RECEIVED
1979 -7-26
PERIODICALS
DIVISION
UNIVERSITY OF ... CAMPUS LIBRARY

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No' QB/8943/78
மலர்: 21 ஆனி: 23 ஷஃபான்: 11 இதழ்: 145
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-7-79

இன்று (7-7-79)
வைரமாளிகையின் ஆதரவில்
வானொலியில் ஒலிபரப்பாகிய
வரணியூரான் குழுவினரின்
**சண்டியன் சின்னத்தம்பி**
[நகைச்சுவை நாடகம்]
காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி
மாலை 7-00 மணி

நாளை [8-7-79]
வரணியூரான்குழுவினர் அளிக்கும்
**சண்டியன் சின்னத்தம்பி**
(நகைச்சுவை நாடகம்)
இடம்: புங்குடுதீவு ஸ்ரீவரசித்தி
விநாயகர் ஆலய வீதி
விசேஷ அரங்கில்
வானொலி, மேடை, திரைப்பட நடிகர்கள் நடிக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன அடிப்படையில்

# தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண அரசு முயற்சி

## மஞ்சுசிறி விவகாரம்: அமெரிக்க பிரஜை அமிருக்கு கடிதம்

[கொழும்பு]

ஓவியர் மஞ்சுசிறி யாழ்ப்பாணத்தில் காயமடைந்தது தொடர்பாக அவருடன் யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கரான திரு ஜேம்ஸ் பி ஹமில்டன் என்பவர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்துக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியை மறுத்து தாம் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் திரு அமிர்தலிங்கத்துக்கு அவர் அனுப்பியுள்ளார்.

திரு அமிர்தலிங்கத்துக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற சைக்கிள் விபத்தின்போது யாழ் ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள், சுபாஸ் ஹோட்டல் ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து உடனடியாகக் கிடைத்த உதவிகள் பற்றி அப்பத்திரிகைச் செய்தியில் ஒன்றும் குறிப்பிடாதது குறித்தும் அவர் மிகவும் கவலை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் உடனடியாக தமது பொருட்களை எடுத்துக் கொடுத்து வாடகைக் காரில் தங்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும் காரச்சாரதி தாங்கள் வற்புறுத்தியும்கூட பணம்பெற மறுத்துவிட்டார் என்றும் திரு ஹமில்டன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரிவினை இயக்கங்களுக்கே தடை விதிக்கப்படலாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு பிரச்சினைக்கு நியாயமான முறையில் சகலரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளையில் தமிழர் விடுதலைக்கூட்டணியைத் தடைசெய்யும் சட்டங்களை அரசு கொண்டுவரமாட்டாதென்றும் பிரிவினை கோரும் இயக்கங்களைத் தடைசெய்யும் விதத்திலேயே சட்டம் இயற்றப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல் தீர்வு காணப்பட்ட பின்னரே வன்முறை இயக்கங்களுக்கும் பிரிவினைக்கும் எதிராகத்தடை விதிக்கும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### உபகுழு அடுத்தவாரம் கூடுகிறது

இதே வேளையில் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்ந்துவரும் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை உபகுழு இவ்விவகாரம் குறித்து தீவிர ஆலோசனை செய்துவருகிறது. இக்குழு அடுத்தவாரம் கொழும்பில் கூடுகிறது.

### ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனம்

ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளதாவது:- மொழி, கல்வி, குடியேற்றம், வேலைவாய்ப்பு, அபிவிருத்தி தொடர்பான விஷயங்களில் தமிழ் மக்களுக்கு மனக்கசப்பும் வேதனையும் அடைந்துள்ளனர். இப்பிரச்சினைகளைத்தீர்த்துவைக்க எமது கட்சி ஆட்சிக்கு வந்ததும் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி நடவடிக்கை எடுக்கப்படும். [ம-இ]

வவனியாவுடன் சிங்களப் பிரிவு இணைப்பு:

## யாழ். மாநகரசபையும் பலத்த கண்டனம்

### உடன் நிறுத்துமாறு அரசுக்கு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

வவனியா மாவட்டத்துடன் அனுராதபுரத்தைச் சேர்ந்த 3 சிங்களப் பிரிவுகளை இணைப்பதற்கு, யாழ்ப்பாணம் மாநகரசபை பலத்த கண்டனம் தெரிவித்தது. அந்த இணைப்பை உடன் நிறுத்துமாறும் சபை அரசைக் கோரியுள்ளது.

நகர முதல்வர் திரு. ஆர். விசுவநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் இத்தீர்மானத்தை, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் இணைந்து ஏகமனதாக ஆதரித்தனர்.

வவனியா மாவட்டத்துடன் 3 சிங்களப் பிரிவுகள் சேர்க்கப்பட்டது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் திரு சு. சண்முகராசாவும், தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதரும் சபையின் அனுமதியுடன் இரு பிரேரணைகளைக் கொண்டுவந்தனர்.

இரு பிரேரணைகளும் ஒரே கருத்துள்ளதாக இருப்பதால், அதனை ஒருவர் பிரேரிக்கலாம் என நகர முதல்வர் கூறியதை திருமதி அந்தோனியா சுவாமிநாதர் ஏற்றுக்கொண்டார்.

திரு. இ. சண்முகராசாவினால் முன்மொழியப்பட்டு திருமதி அந்தோனியா சுவாமிநாதரினால் வழிமொழியப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### தீர்மானம்

"தமிழ் ஈழத்தின் ஒரு பகுதியாகிய வவனியா மாவட்

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்-கொழும்பு

## மெயில் ரயிலில் வெடிகுண்டு?

[கொழும்பு]

கொழும்பு-யாழ். மெயில் ரயிலில் வெடிகுண்டு இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து ரயிலிலிருந்த பிரயாணிகள் இறக்கப்பட்டு ரயில் சோதனை செய்யப்பட்டது.

நேற்று இரவு 7-15 மணிக்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வர இருந்த மெயில் ரயிலிலேயே பொலிசாரும் ரயில்வே பாதுகாப்பு சேவையினரும் வெடிகுண்டு தேடுதல் நடத்தினர்.

ரயிலில் பிரயாணம் செய்வதற்காக டிக்கட் எடுத்த அநேகர் பயம்காரணமாக பிரயா

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கூட்டணி திட்டமிட்டு இயங்குகிறது

### திருமலைதுறைமுகத்தைபாதுகாப்புடன் அபிவிருத்திசெய்க

மாவட்ட அமைச்சர் கோரிக்கை

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திட்டமிட்டு இயங்கி வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் திருகோணமலைத் துறைமுகம் குறித்து பெரும் பிரச்சினை எழலாம். எனவே அரசு தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட அமைச்சர் திரு எச் ஜி பி நெல்சன் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ் ஈழக்கோரிக்கை எழுந்துள்ள இவ்வேளையில் திருகோணமலை சந்தேகத்திற்கிடமான ஒரு துறைமுகமாகவே உள்ளது.

### கப்பல்களை சோதனையிட அனுமதிவேண்டும்

இக்கால கட்டத்தில் திருகோணமலைக்கு வரும் கப்பல்களை சோதனையிட திருமலை அரசாங்கஅதிபருக்கு அனுமதி வழங்கவேண்டும்.

### திருமலைமூலம் வடபகுதிக்கு இறக்குமதி

வடபகுதிக்குத் தேவையான பொருட்களை திருமலைத்துறைமுகத்தினூடாகவே இறக்குமதி செய்யப்படவேண்டும்.

### காங்கேசன் துறைமுகத்தில்

காங்கேசன்துறை துறைமுகத்தில் வேலைகள் குறைவாக இருப்பதால் அவர்கள் திருமலை துறைமுகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும். (ம-இ)

## தற்காலிக மின்சாரத் தடை

[சுன்னாகம்]

அவசர மின்சார திருத்த வேலைகள் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சிப்பகுதிகளில் எதிர்வரும் 8 ம், 9 ம்

(6-ம் பக்கம் பார்க்க)

மு. சபாநாதன்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்,
"மகேந்திரம்",
வட்டுக்கோட்டை.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரலிங்கம் பெண் இராசலட்சுமி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

இ. சி சுந்தரலிங்கம்,
திருநெல்வேலி வடக்கு.

மனுதார்

மரண சாதன) நியாயாதிக்கம்) இல : 3457

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆடி மாதம் 13-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.
2961



### முதலிலேயே முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற துன்னாலை வடக்கு வேலுப்பிள்ளை அருட்செல்வவிநாயகம் மறுநாமம் அருட்செல்வம் என்பவரின் மரணசாதன விடயமாய்

மரணமெய்தியவர்

அருட்செல்வவிநாயகம் கைம்பெண் திலகவதி,
துன்னாலை வடக்கு

மனுதார்

மரணசாதன நியாதிக்கம் இல. 1071

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதென்றும் 1979 வைகாசி 10 ந் திகதியன்று அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

1979 வைகாசி 16-ந் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
இ. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

என்னுல் தயாரிக்கப்பட்டது
மு. ஈசுரபாதம்,
மனுதாரின் சட்டத்தரணி,
பருத்தித்துறை 2969



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# "பாடசாலைகளில் ஆய்வுகூடம் அத்தியாவசியமானது"

## குளவிசுட்டான் வித்தியாலய கட்டிட திறப்பு விழாவில் வவனியா எம். பி.

(நெடுங்கேணி)

"மனிதனின் வாழ்வில் விஞ்ஞானம் சேராத பகுதியே இல்லையெனலாம். மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வி அவசியமானது மாத்திரமின்றி அதனை நல்லமுறையில் கற்பிக்க ஆய்வுகூடம் வேண்டும். அடுத்த நிதிஆண்டில் வவனியா மாவட்டத்திலுள்ள இதுபோன்ற பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூட வசதி செய்துகொடுக்க நானும் பிரதம கல்வி அதிகாரி திரு எம் சிமியாம்பிள்ளையும் முயற்சி எடுப்போம்" என்று குளவிசுட்டான் கனிஷ்ட உயர்தரவித்தியாலயத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் வவனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு தா. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்

வித்தியாலய அதிபர் திரு சு துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதமகல்வி அதிகாரி திரு எம். சிமியாம்பிள்ளை பழைய மாணவர்களால் அமைக்கப்பெற்ற புதிய கலையரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் பெற்றோர்களினதும் பழைய மாணவர்களினதும் ஒத்துழைப்பையும் பெருமுயற்சியையும் பாராட்டுகிறேன் எனக் குறிப்பிட்டார்.

சிவநெறிப்புலவர் திரு. க. கனகராசா மங்களதீபம் ஏற்ற ஆரம்பமான இவ்விழாவில் வவனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் பாலசுந்தரம், புளியங்குளம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு செ கணபதிப்பிள்ளை மற்றும் திரு சி. குலராசசிங்கம், திரு க ஞானமுத்து ஆகியோர் உரை நிகழ்த்தினர் மாணவர்களின் கலைநிகழ்ச்சியைத் தொடர்ந்து திரு கே ஆர். கணேசன் வளர்மதி மன்றம் ஆகியவற்றின் இசைவிருந்தும், முல்லைமணியின் 'பண்டாரவன்னியன்' நாடகமும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. திருமதி ச. பேரம்பலம் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு, திரு. ஏ ட முருகேச பெற்றோர் ஆசிரியர் மாணவர் சார்பில் நன்றிகூறினார்.

## "யாழ்ப்பாண மாவட்ட ஐந்தாண்டு அபிவிருத்தித்திட்ட வேலைகளை உடனே ஆரம்பிக்குக!"

### மாவட்ட அமைச்சரிடம் பண்டிதர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தை உடனே வகுத்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வேலைகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் யாழ் மாவட்டஅமைச்சர் திரு. ஏ ஆர். மன்சூருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"யாழ் மாவட்டத்திற்கு ஓர் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தை வகுக்குமாறு நான் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டதற்கிணங்க 18-4-79ம் திகதிய ஐந்தாண்டுத் திட்டத்தை வகுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது.

"உங்கள் கடிதப்படி இந்தக் குழுவும் இன்னும் இயங்கவில்லை என்னும் செய்தி இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் ஊக்கமில்லை என்பதைப் புலப்படுத்துகிறது.

பிரதேசஅமைச்சின் வேண்டுகோளுக்கிசைய 50 லட்சம் ரூபாவுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் நாலாயிரம் லட்ச ரூபாவுக்கு வகுக்கப்பட வேண்டிய ஐந்தாண்டு அபிவிருத்தித்திட்டத்தை வகுப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்காதிருப்பது இம் மாவட்டத்தைப் புறக்கணிப்பதாகவே கருதப்படும்.

குருநாகல் மாவட்டத்துக்கு 4650 லட்சம் ரூபாவுக்கு ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதற்கு இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. 4000 லட்ச ரூபா திட்ட ஐந்தாண்டு அபிவிருத்தி வேலைகளைத் தொடங்காமல் பின்போட்டு ஒதுக்கிவிடுவதற்காகத்தான் பிரதேசஅமைச்சின் 50 லட்ச ரூபா அபிவிருத்திவேலைகள் பற்றிப் பேசப்படுகிறதென வும் பலர் கருதுகின்றனர். எனவே ஐந்தாண்டு அபிவிருத்தித்திட்டத்தை உடனே வகுத்து 1980 ஜனவரிமாதத்தில் அத் திட்ட வேலைகளைத் தொடங்குவதற்கு உடனே நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

## ரியூஷன் மாணவிகளிடம் சேஷ்டை!

(பூலோலி)

இரவில் ரியூஷன்முடிந்துவீடு திரும்பும் மாணவிகளிடம் சேஷ்டைகள் புரிந்ததாகக் கூறப்படும் காடையர்கள் கோஷ்டியொன்று செம்மையாக வாங்கிக்கட்டிக்கொண்டு தலைதெறிக்க ஓட்டம்பிடித்ததாம் பருத்தித்துறை-தும்பளை வீதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது

இரவில் ரியூஷன் முடிந்து தினமும் இவ்வீதியால் செல்லும் மாணவிகளிடம் காடையர்கள் தமது கைவரிசையைக் காட்டிவந்தனராம். இதனால் இம்மாணவிகள் ரியூஷனுக்குச் செல்வதற்குப் பீதியும், பயமும் அடைந்துவந்தனர். இத் தொல்லை பற்றி மாணவிகளின்பெற்றோர் கிராமசேவை அலுவலர் திரு.சிவப்பிரகாசத்திடம் புகார் செய்துள்ளதைத் தொடர்ந்து, இரவில் அவர் கண்காணிப்புச் செய்தபோது குறிப்பிட்ட காடையர்கள் மாணவிகளிடம் வழக்கம்போல் தமது கைவரிசையைத் தொடங்கவே அப்பகுதி இளைஞர்களின் உதவியுடன் கிராமசேவை அலுவலர் காடையர்களைத் துரத்தி விரட்டியடித்தார். இவர்களது கையில் சிக்கிய சில காடையர்கள் நையப்புடைக்கப்பட்டனராம். இக் காடையர்களின் அட்டகாசம் பற்றிப் பருத்தித்துறைப் பொலிசிலும் புகார் செய்யப்பட்டுள்ளது. (அ)


## நன்றி நவிலல்
### திருமதி இராசமணி மகேசன்

திருமதி இராசமணி மகேசன் அவர்களின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றியவர்களுக்கும், மலர் வளையங்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். தனித்தனி நன்றி கூற முடியாமைக்கு வருந்துகிறோம்.

நவாலி, முதலியார் வை. மகேசன்
மானிப்பாய். அவர்களும் குடும்பத்தினரும்
2968



## அறிவித்தல்
### க. பொ. த. (உயர்தரம்)

பொருளியல் பாடத்திற்கான
மற்றுமோர் புதிய வகுப்பு
இன்று 7-7-79 சனிக்கிழமை
ஆரம்பமாகும்.

ACCOUNTANCY

57, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2975



பித்தளையால் செய்யப்பட்ட ஒரேயொரு
மின்சாரத்தில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம்

## 'இம்மா'

- நீடித்து உழைக்கக்கூடியது
- அதிக சக்தி வாய்ந்த வெளிநாட்டு மோட்டார் பொருத்தப்பட்டது
- வீட்டு/கமத் தேவைகளுக்குகந்தமாதிரி தயாரிக்கப்பட்டது

1½"×1½" விட்டமுள்ள இயந்திரத்தின்
விலை ரூபா 2,475-00 மட்டுமே

தயாரிப்பாளர்
இம்மா என்ரப்பிறைசஸ் லிமிட்,
558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(2980)



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மூன்றரை மாத சிவப்பு இன கோழிக்குஞ்சுகள் 500 விற்பனைக்கு உண்டு விலை 22/50. பொன். தர்மபாலன், 104, பலாலி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7423. (2965)

பயனியர் கசற் டெக்-றெக்கோர்ட் பிளேயர் ஒலிப்பதிவாளருக்கு உகந்தது. விசாரணை இன்றும் நாளையும் யூனிஸ்வரா கபே, யாழ்ப்பாணம். 2971

மாங்குளம் தணுக்காய் றோட்டில் அறரை மைல் ஒட்டறுத்தகுளத்தில் இருபது ஏக்கர் பெட்டுக் காணி கற்பனைக்குண்டு பலவித பழமரங்கள், தென்னை, தோட்டக்காணியும், வயலும், கிணறுமுண்டு விபரங்களுக்கு: செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி, 9, கண்டி றோட், சாவகச்சேரியுடன் தொடர்பு கொள்ளவும். 2952

### தேவை

கோழி முத்தல் 5/50 முதல் 6/- வரை தொகையாக கொள்வனவு செய்வோம். யாழ் மாவட்டத்துக்குள் நேரடியாகவும் வந்து பெற்றுக்கொள்ளப்படும். தொடர்பு கொள்ளும் விலாசம்: ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 7131. (2979)

### பயிற்சி

விஷேட 3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-07-1979 ஆரம்பமாகவுள்ளது இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B, மொடிசாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2962

### வகுப்புகள்

A/L 80-ம், 81-ம் ஆண்டுக்குரிய தாவரவியல், விலங்கியல், கணித வகுப்புகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு மாணவர் போதனை நிலையம், 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 2988



## மரண அறிவித்தல்
### சி. நடராசா

இவர் கொழும்பு நீர்ப்பாசன இலாகா பிரதம லிகிதரும், காலஞ்சென்ற சின்னையா தம்பதிகளின் ஏக புத்திரனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும், பேராதனை வளாக மாணவன் சர்வேஸ்வரா, யோகேஸ்வரா, அனுஷா, வனஜா ஆகியோரின் தந்தையும், காசல் கம்பனி செல்வராசாவின் மைத்துனரும், கனகேஸ்வரி, சுதுமலை ஆசிரியை தனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், யாழ்ப்பாணக் கச்சேரி அலுவலக உதவியாளர் சபாரத்தினம், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் இராசதுரை ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை பத்து மணியளவில் தெல்லிப்பழை, வவுனாவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் இருந்துஈமக்கிரியைகளுக்காக கட்டுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 2978

# மரமுந்திரி உற்பத்தியில் தமிழருக்கு அக்கறையில்லை!

## வடபகுதி மரமுந்திரிகை செய்கையாளர் சங்கச்செயலாளர் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

'மரமுந்திரி உற்பத்தியில், தமிழர்கள் அக்கறை காட்டாததினால் அதற்கென ஒதுக்கப்பட்டகாணிகள், மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.'

வடபகுதி மரமுந்திரிகைச் செய்கையாளர் சங்கச் செயலாளர் திரு வி. சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவனியாவில், பிராமணாளங்குளத்தில், மரமுந்திரிகைச் செய்கைக்கென 4000 ஏக்கர் ஒதுக்கப்பட்டதென்றும், இதில் 1500 ஏக்கர், தமிழர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டதென்றும் 5 வருடமாகியும் செய்கை பண்ணப்படவில்லையென்றும் கூறினர்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் திரு சந்ததியார் ஆகியோருடன், மரமுந்திரிகை உற்பத்திபற்றி ஆலோசனை செய்ததாகவும், வடபகுதி எம். பிக்களுக்கும் இதுபற்றி அறிவித்ததாகவும், எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையென்றும் திரு சண்முகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: "பிராமணாளன் குளத்தில் 2500 ஏக்கர் இன்னும் பகிர்ந்து வழங்கப்படவில்லை. ஏற்கனவே 10 ஏக்கர் வீதம் வழங்கப்பட்ட 1500 ஏக்கர் செய்கைபண்ணப்படாததினால் மிகுதி 2,500 ஏக்கர் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆதலால் மரமுந்திரிகைச் செய்கைக்கு காணி பெற்றவர்கள் உடனடியாக உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டும். யாழ்ப்பாணம், மன்னார், வவனியாவை சேர்ந்த 2500 பேருக்கு 25,000 ஏக்கர் காணி மரமுந்திரிகைச் செய்கைக்கு வழங்க சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசு மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டுள்ள தனியாருக்கு ஏக்கருக்கு 600 ரூபா தான் மான்யம் வழங்குகிறது. ஆனால், மற்ற எல்லா ஏற்றுமதி சிறுபயிர் பெருகைளுக்கும் அரசு 2500 ரூபா வரை மான்யம் வழங்குகிறது. இதுபற்றிதான் பெருந்தோட்டத்தொழில் அமைச்சர், திட்டமிடல் அமைச்சர் நிதி அமைச்சர் ஆகியோர்களுக்கு பாகுபாட்டை நீக்குமாறு கோரியுள்ளேன். மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு மரம் காய்க்கும்வரை ஏக்கருக்கு 10,500 ரூபாவரை அரசுமான்யம் வழங்கி வருகிறது.

மன்னாரில் கொண்டச்சி என்ற பகுதியில் 5000 ஏக்கர் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பயிர் நன்றாக வளர்ந்துள்ளது, இன்னும் 25,000 ஏக்கர் மரமுந்திரிகை செய்கைக்கு ஒதுக்கப்படவுள்ளது. என்று தெரிவித்த அவர்

'வேரவில், பூநகரி பகுதியில் 300 பேருக்கு 25,000 ஏக்கர் மரமுந்திரிகைக்கு வழங்கப்பட்டது. ஆனால் ஒருவரும் செய்கையில் ஈடுபடவில்லை பூநகரி முழங்காவிலும் 2500 ஏக்கர் மரமுந்திரிகைக்கு வழங்கப்படவிருக்கிறது. தமிழ் மக்கள் மரமுந்திரி, செய்கையில் அக்கறை எடுக்காததை யிட்டு கவலைப்படுகிறேன். வடபகுதி எம். பிக்களுக்கு பல தடவை இதுபற்றி தெரிவித்தேன். ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மரமுந்திரிகை செய்கைமூலம் தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதுடன் தமிழ்இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம் என்று தெரிவித்தார். (க)

# ஒல்லாந்தர்காலத்தில்எழுந்த கல்வளை விநாயகர் கோயில்

கல்வளை விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் ஜூன் மாதம் 29ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

இம் மகோற்சவத்தை யொட்டி இக்கோவில் மீது பாடப்பெற்ற கல்வளை அந்தாதியின்வரலாற்றை நா. அமிர்தராஜன் இங்கே தருகிறார். இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் ஒல்லாந்தர் காலத்தில் வில்வராயமுதலியார் இக் கல்வளை விநாயகர் பேரில் மிகுந்த பக்தியுடையவராய் கல்வளை அந்தாதி பாடத்தொடங்கினார்.

காப்பின் முதலிரண்டு அடிகளான, "தார் கொண்ட பூங்கிள்ளைச் சேக்கையில் தும்பி சாலப்பம்பும், சீர் கொண்ட கல்வளை அந்தாதி பாடத்திரைக்கடல் சூழ்" என்னும் இரண்டு வரிகளையும் ஏட்டில் குறித்த பின்னர் காப்பை முடிப்பதற்குரிய இறுதி இரண்டு வரிகளையும் எழுதுவதற்கு சிறிது சிரமம் உண்டாகவே ஏட்டையும் எழுத்தாணியையும் தமதுவீட்டின் முற்பகுதியில் அமைந்த வளையில் சொருகிவிட்டு செய்யுளை முடிக்கும் திறனைவேண்டி விநாயகரை வணங்குவதற்கு ஆலயம் சென்றுவிட்டார்.

இதற்கிடையில் தந்தையார் இல்லாத நேரம் பார்த்து தாயிடம் உணவு வேண்டி வீடுவந்த மகன் சின்னத்தம்பி விரைவாக உணவை அருந்திவிட்டு வீட்டின்முற்பகுதியை பார்த்த பொழுது ஏடும் எழுத்தாணியும் இருக்கக்கண்டு அந்த ஏட்டினை எடுத்து விரித்துப் பார்த்தார். அதில் இரண்டு வரிகள் மட்டும் எழுதப்பட்டிருந்த செய்யுளைக்கண்டு உடனே இறுதி இரண்டு வரிகளான, "பார் கொண்ட பல்லுயிர்க்கு ஆனந்த மும்மதம் பாயும் கும்பக்

கார் கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே"

என எழுதி செய்யுளை பூர்த்தி செய்துவிட்டு ஏட்டினை திரும்பவும் இருந்த இடத்தில் சொருகிவிட்டு விரைந்து வீட்டை விட்டகன்றார்

ஆலயத்திலிருந்து திரும்பிய தந்தையாராகிய வில்வராய முதலியார் ஏட்டை எடுத்துப் பார்த்தபொழுது செய்யுள் பூர்த்தியடைந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு மனைவியை அழைத்து "யான் இல்லாத நேரம் இங்கு வந்தவர் யார்?" என வினவினர். மகன் சின்னத்தம்பி என்று பதில் சொன்னால் கோபமடைந்து அடித்துவிடுவார் என்ற பயத்தினல், "அப்படியாக எவரும் வரவில்லை ...சின்னத்தம்பி தான் பசிக்கிறதென்று வந்து உணவருந்திப் பின் ஓடிவிட்டான்" என்று பதில் சொன்னார்.

தந்தையாராகிய வில்வராய முதலியாருக்குவிபரங்கள் யாவும் தெற்றென தெரிந்துவிட்டன. உடனே ஆட்களை பல இடங்களுக்கும் அனுப்பி மகனாகிய சின்னத்தம்பியை அழைத்துவரப்பண்ணி அன்புடன் உபசாரம் செய்து "இக் கல்வளை அந்தாதியை நீயே பாடி முடிப்பாயாக" என்று பணித்தார் இவ்வாறு தோன்றியதுதான் கல்வளை அந்தாதி எனப் புகழ்பெற்ற பாடலாக அமைந்தது.

ஈழநாட்டின் தலைசிறந்த புலவர்களில் ஒருவராக முற்காலத்தில் திகழ்ந்தார் சின்னத்தம்பிப் புலவர்.

நா. அமிர்தராசன்

சன்சோனிக்கமிஷன்:

# ஜனார்த்தனன் கைதாகியிருந்தால் அமைதிக்குப் பங்கம்ஏற்பட்டிருக்கும்

## — முன்னாள் யாழ். பொலிஸ் அதிபர்

[கண்டி]

1974ம் ஆண்டு ஜனவரி 10ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் இந்தியாவைச் சேர்ந்த திரு. ஜனார்த்தனன் உரையாற்றக் கூடாதுஎன்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இம் மகாநாட்டில் ஜனார்த்தனன் கலந்துகொள்ளக்கூடாது என நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை. சிங்கப்பூரிலிருந்து ராமசாமி என்றபெயரில் இலங்கைக்கு வந்த திரு. ஜனார்த்தனன் மகாநாட்டில் கலந்து கொண்டபோதும் மகாநாட்டில் உரையாற்றவில்லை; இதன் மூலம் மகாநாட்டை ஏற்பாடு செய்தவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளை அவர்கள் மீறவுமில்லை"

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின்சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. கே. சண்முகலிங்கம், சட்டத்தரணி திரு. ஆர். ரவீந்திரனின் உதவியுடன் கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனிக்கமிஷன் விசாரணையில் முன்னாள் யாழ் பொலிஸ் அதிபர் திரு. ஜே. எம். பி. ஆரியசிங்காவை குறுக்குவிசாரணை செய்தபோது திரு. ஆரியசிங்கா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஆரியசிங்கா தொடர்ந்து தமது சாட்சியத்தில் கூறியதாவது;

"இம்மகாநாட்டைபொட்டி யாழ். நகரெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சில பிரதான சந்திகளில் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பொதுமக்களே அமைத்தார்கள். ஜனவரி 9ம் திகதியில் இடம்பெற்ற கலாச்சாரப் பவனியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இப்பவனியில் சென்ற ஓர் ஊர்தியில் திரு. ஜனார்த்தனன் அங்கு பொருத்தப்பட்டிருந்த ஒலி வாங்கிக் கருவியைக் கையிலெடுத்த போது. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு: சந்திரசேகரா மைக்கை ஜனார்த்தனனின் கையில் இருந்து பறித்தெடுத்தார்."

கமிஷனர்! "சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்திருந்த திரு. ஜனார்த்தனனை பொலிஸார் அன்றே கைதுசெய்திருக்கலாமே அவ்வாறு அவர் கைது செய்யப்பட்டிருந்தால் ஜனவரி 10ம் திகதி மகாநாட்டில் பாரதூரமான சம்பவம் ஒன்றும் நடந்திருக்காது. ஏன் அன்று அவரைப் பொலிஸார் கைதுசெய்யவில்லை?

திரு. ஆரியசிங்கா! திரு. ஜனார்த்தனனைக் கைதுசெய்யும்படி பொலிஸ் தலைமையலுவலகத்திலிருந்து கட்டளை கிடைக்காததாலும், 50,000 மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்த மகாநாட்டில் வைத்து திரு. ஜனார்த்தனன் கைதுசெய்யப்பட்டால் அமைதிக்குப்பங்கம் ஏற்படும் என்றும் கருதியே அவரைக் கைது செய்யவில்லை.

திரு ஆரியசிங்கா தொடர்ந்து கூறியதாவது! "சுமார் 3-30 மணியளவில் மகாநாடு வீரசிங்க மண்டபத்திற்கு வெளியே நடைபெற்றது. திரு ஜனார்த்தனன் மேடையில் அமர்ந்திருந்தார். போக்குவரத்திற்கு தடையாக மக்கள் இருப்பதாக பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலை அடுத்து சில பொலிஸாருடன் திரு சந்திரசேகரா அந்த இடத்திற்குச் சென்றார் அவர் அங்கு சென்றதும் திடீர் என்று மகாநாட்டிற்குப் பொருத்தப்பட்டிருந்த விசேஷ விளக்குகள் அணைந்தன. மக்கள் சிதறி ஓடினர். பொலிஸார் ஓடும் மக்களை ஒதுக்க முற்படுகையில் அவர்கள் தாக்குதலுக்கு உள்ளானார்கள். இதனால் திரு சந்திரசேகரா கண்ணீர்ப்புகையை உபயோகிக்குமாறு பொலிசாருக்கு கட்டளையிட்டார். 150 யார்களுக்கு அப்பால் இருந்து மேடைப்பக்கம் கண்ணீர்ப் புகை வீசப்பட்டது. கூட்டம் முடிவடைய 30 நிமிடங்களுக்கு முன்பே இச்சம்பவம் நடைபெற்றது. இல்லையெனில் பொதுமக்கள் கூட்டம்முடிய அமைதியாக சென்றிருப்பார்கள். மகாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள் மகாநாட்டின் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை அரசாங்க அதிபருடனும் பொலிசுடனும் தொடர்பு கொண்டுசட்டத்திற்கு பணிந்து நடந்தார்கள் வாலியர்கள் சட்டங்களை மீறுபவர்களாக காணப்பட்டனர்" [கா]

## மக்கள் கருத்து

### மருத்துவமாது நியமிக்குக!

எழுதுமட்டுவாள், உசன், கொடிகாமம், வரணி, கச்சாய் போன்ற கிராமசேவையாளர்களின் பிரிவுகள் தோறும் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு மருத்துவமாது கடமையாற்றி வருகின்றனர், ஆனால் மிருசுவில் கிராமசேவையாளர் பிரிவுக்கு மட்டும் மருத்துவமாது இதுவரை நியமிக்கப்படவில்லை. இதனால் மிருசுவில் கிராம சேவையாளரின் பிரிவின் கீழ் மிருசுவில் மத்தி, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, கொட்டிகை, குருக்கள் மாவடி, மன்னன்குறிச்சி, பளையவாய்க்கால், ஆயத்தடி, ஒட்டுவெளி போன்றவிடங்களில் வசிப்பவர்கள் மருத்துவ மாதுவின் உதவியைப் பெறமுடியாது மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். மிருசுவில் பகுதிகளிலிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் படும் கஷ்டமோ சொல்லுந்தரமன்று. இவ்விஷயத்தில் சுகாதார இலாகாவினர் உடன் கவனம் செலுத்தி, மிருசுவில் கிராமசேவையாளர் பிரிவுக்கு ஒரு மருத்துவ மாதுவை உடனடியாக நியமிக்குமாறு கேட்கிறோம்.

ம. வல்லிபுரநாதன்
மிருசுவில்.

## சைக்கிள் விலை கணிசமாக வீழ்ச்சியுறும்!

(கொழும்பு)

சைக்கிள்கள் தற்போதைய சந்தை விலைகளிலும் பார்க்க மிகக்குறைந்த விலையில் பொதுமக்கள் பெறக் கொள்ளக்கூடிய நிலை விரைவில் உருவாகவிருக்கிறது. புதிய விலைகள் பெரும்பாலும் ரூ. 450, ரூ. 550 க்குட்பட்டதாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது நாட்டின்நிலவும் எரிபொருள் நெருக்கடியின் காரணமாக போக்குவரத்து கஷ்டங்களை இலகுவாக்கும் வகையில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். எம். மொஹமட் வெளிநாட்டு சைக்கிள் கம்பனிகளுடன் தொடர்பு கொண்டு 50,000 சைக்கிள்களைமிக விரைவில் இறக்குமதி செய்ய நடவடிக்கையெடுத்துள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் கடன் அடிப்படையிலும் சைக்கிள்களைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுவார்களென்று தெரிகிறது.

உரும்பராய்

## கற்பகவிநாயகர் ரதோற்சவம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலய ரதோற்வம் நாளை நடைபெறுகிறது. திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் செவ்வாய்க்கிழமை பூங்காவனமும் நடைபெற்று இவ்வருட உற்சவம் முடிவடைகிறது.

## காரியாலய உதவியாளர்

(யாழ்ப்பாணம்)

வவனியா நெடுஞ்சாலை, பிரிவு பொறியியலாளர் காரியாலய பதில் கணக்காளரான திரு. வி. சண்முகநாதன், மன்னார் கச்சேரி காரியாலய உதவியாளராக இம்மாதம் 1ம் தேதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். [க]

## நாவலர் விழா ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகநாவலர் பெருமானின் நூற்றாண்டுவிழாசம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் புதன்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

★ தமிழக தலைமைச் செயலகம் முன்பாக இன்று

# கருணாநிதி உண்ணாவிரதம்!

## எதிர் நடவடிக்கையில்

# அ.இ.அ.தி.மு.க. இறங்கும்?

[சென்னை]

தமிழ்நாடு தலைமைச் செயலகத்தின் முன்பாக தி. மு. கழகத் தலைவர் திரு மு. கருணாநிதியும், ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களும் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமிருப்பார்கள்.

இதேநேரத்தில் திரு. கருணாநிதியின் உண்ணாவிரதத்துக்கு எதிராகப் போட்டி ஆர்ப்பாட்டமொன்றை இன்று நடத்த அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

ஆளும் அ. இ. அ. தி. மு கழகத் தொண்டர்களால் எதிர்க்கட்சியினர் தாக்கப்பட்டு வருவதை ஆட்சேபித்தே இந்த ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இன்று, தமிழகச் செயலகம் முன்பாக நடைபெறும் உண்ணாவிரதத்தை எதிர்த்து போட்டி ஆர்ப்பாட்டம் நடைபெறும் பட்சத்தில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு "சீர்குலையலாம்" என்றும், சட்டம் ஒழுங்கை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் மத்திய அரசாங்கத்திடமும், மாநில கவர்னரிடமும் அவசரக்கோரிக்கை விடுத்துள்ளார்.

## மெக்ஸிக்கோவில்

# ஷா கொலை முயற்சி ஈரான் மறுக்கிறது

தெஹ்ரான், ஜூலை 6

ஈரான் மன்னர் ஷாவின் கொலைமுயற்சி செய்திக்கு ஆயத்தொல்லா கொமெய்னியின் ஆதரவாளர் ஒருவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மன்னர் ஷாவைப் படுகொலை செய்யும் நோக்கத்துடனோ அல்லது கைதுசெய்யும் நோக்கத்துடனோ மெக்சிகோவிற்கு எவரும் அனுப்பப்படவில்லை என்று ஈரானிய ஆத்மீகத் தலைவர் ஆயத்தொல்லா கொமெய்னியின் உதவியாளரும், மதத் தலைவர்களில் ஒருவருமான ஆயத்தொல்லா சொதெசேயின்மூரி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பத்திரிகையாளருக்கு இவர் கருத்துத் தெரிவிக்கையில் ஈரானிய மக்களுக்கு ஷா பெரும் தீங்கிழைத்திருப்பதாகவும் குற்றவாளிகள் எவராக இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனைக்குட்படுத்த வேண்டும் என்பதே இஸ்லாமிய கோட்பாடாகும் என்றும், ஈரானிய மதத்தலைவர் கொமெய்னிக்கும் பிரதமர் பாசார்கானுக்கும் இடையில் கருத்துவேறுபாடு என்ற செய்தி தவறானது என்றும் தெரிவித்தார். (கா)

# கம்பூச்சியாவில் உணவு நெருக்கடி!

ஜெனீவா, ஜூலை 6

இவ்வருட முடிவிற்குள் கம்பூச்சிய மக்கள் பெரும் பஞ்சத்தை எதிர்நோக்குவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக உணவு ஸ்தாபனத் தலைவர் ஜெனீவாவில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகையிலேயே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

கம்பூச்சியாவுக்கு உலக நாடுகள் அவசர உதவி அளிக்கத் தவறும் பட்சத்தில் அந்த நாடு பெரும் பஞ்சத்தால் பாதிக்கப்படும் என்றும், கம்பூச்சியாவின் தேவையான உணவு கையிருப்பில் இல்லையெனவும், மனிதாபிமானத்துடன் உலகநாடுகள் கம்பூச்சியாவிற்கு உதவ முன்வர வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மகாநாட்டில் உரையாற்றிய இந்திய பிரதிநிதி கடந்த ஜூலை முதல் உலகப் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டினார். [கா]

## இந்திராவின் தடைஉத்தரவுமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது

புதுடில்லி, ஜூலை 6

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தன் மீதும் தனது மகன் மீதும் விசாரணை நடாத்தவென அமைக்கப்பட்ட விசேஷ நீதிமன்றங்களை ஆட்சேபித்து வழக்கு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்துள்ளார்.

திருமதி இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் அவசரகாலச் சட்டம் அமுலில்இருந்த பொழுது மலிந்திருந்த ஊழல் பற்றி தன்னையும் தன்மகனையும், தன் சகாக்களையும் விசாரிக்க என்று ஏற்படுத்தப்பட்ட விசேஷ நீதிமன்றங்களை ஆட்சேபித்து இந்திராகாந்தி கொடுத்த தடைஉத்தரவு மனுவை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. [கா]

## இன்றைய பலன்

ஆனிமாதம் 23-ம் திகதி

[சனிக்கிழமை]

(7-7-1979

**மேடம்:** ஏமாற்றத்தில் தாக்குதலால் அவதிப்படுவீர்கள், பூமிப் பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும், சிறு பிணிக்கும் இடமுண்டு. பொறுமை நன்று.

**இடபம்:** பசுமையான சம்பவம் நடைபெறும், களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும், காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு

**மிதுனம்:** வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும், வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

**கடகம்:** கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள், பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், ஈருவாக உத்தியோகத்தர்களின் செல்வாக்கு வளர்பிறையாகும்.

**சிங்கம்:** உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள், தொழில்துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும், வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான மாற்றமும் ஏற்படலாம்.

**கன்னி:** வேண்டிய அளவுக்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும், புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள், நீண்டநாள் கனவு இன்று நனவாகலாம். சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம். தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** அதிக ஆசையினால் அவதைப்படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளலாம் சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும், அமைதி நன்று.

**தனுசு:** மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும் புகழ் அடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு, பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** சிந்தனைக் கலைகள் தாக்கும், சிறிவருப்பேசம், உடன்பிறந்த சகோதரத்தின் உடல் நிலையும் கவலையைத் தரும்.

**கும்பம்:** வாகனச் சொந்தக்காரர்களுக்குச் சிறப்பான தினம், ஆசிரியர் வாழ்க்கையில் முன்னேற்றப்படுவார்கள், மாணவர்களாயின் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றமுண்டு, பொதுத்துறைகளிலும் நாட்டம் ஏற்படும்.

**மீனம்:** கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும், சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர், வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## புத்தூர் தீவைப்பு வழக்கில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் தீவைப்பு வழக்கில் யாழ்ப்பாணம் நீதவான் திரு நிமால் திஸநாயக்கா எதிரியை விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் 77 டிசம்பர் 8-ம் தேதி புத்தூரைச் சேர்ந்த ஆறுமுகம் தவராசா என்பவர் அருணாசலம் கயிலாயபிள்ளை சொற்றிற்கு தீவைத்து 5000 ரூபா சேதம் விளைவித்ததாக காங்கேசன்துறை பொலிஸாரல் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி எஸ். தயாசேந்திரவின் உதவியுடன் எதிரிசார்பில் ஆஜரானார்.

விசாரணையின்பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

## தொண்டமனாறில் மற்றுமொரு கொலை

[புலோலி]

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தொண்டமானாறில் பலத்த காயங்களுடன் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

தொண்டமானாறு - திருவில் முருகன் ஆலயத்துக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி என்பவரின் சடலத்தின் முகத்திலும், தலையிலும் பலத்த காயங்கள் காணப்பட்டன.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு ரி வேலுப்பிள்ளை விசாரணை நடாத்தி பருத்தித்துறை நீதிபதி திரு. கே ஞானச்சந்திரனுக்கு இது தொடர்பாக அறிவித்தார்

கொலை எனத் தீர்ப்பளித்த வல்வெட்டித்துறை பொலிசாரைத் தொடர்ந்து விசாரணை நடாத்துமாறு உத்தரவிட்டதுடன் சடலத்தைத் தகனம் செய்யுமாறும் பணித்தார். சடலம் நேற்று மாலை தகனம் செய்யப்பட்டது. [கு]

## முதலாவது பெண் நீதிபதி

[கொழும்பு]

இலங்கையின் முதலாவது பெண் நீதிபதியாக ஒருவர் நியமனம் பெற்றிருக்கிறார்.

திருமதி டி எம் எம் பிரேமதிலக்க என்பவரே அவர் ஹல்ஸ்ட்ரொப் நீதிமன்றத்தில் அவர் கடமையாற்றுவார்

## இறக்குமதிச் சேலைகள்

(நீர்வேலி)

இறக்குமதி செய்யப்பட்ட நைலெக்ஸ் சேலைகள் வலி கிழக்கு தென்பகுதி ப நோ. கூ. சங்கத்தினால் விற்பனை செய்யப்படுகின்றன.

மேற்படி சங்கத்தின் சகல விற்பனை நிலையங்களிலும் பெருந்திரளான பொதுமக்கள் இச்சேலைகளை வாங்குகின்றனர். (அ)

......

## 'விக்ரோறியாவின் சரித்திரத்தில் இவருக்கு தனிஇடம்'

—அமிர்

[சுழிபுரம்]

"சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் சரித்திரத்தில் தபால் அதிபர் இ தம்பையா ஒரு தனியான இடத்தை வகிக்கின்றார் கல்லூரியை நடாத்த முடியாது இருந்த ஒரு காலத்தில், சகல பொறுப்புக்களையும் தாமே ஏற்று மிகவும் சிறப்புடன் இன்று இக்கல்லூரி வானளாவ வளர்ந்திருக்கும் நிலைக்குக் காரணமாக விளங்குபவர் திரு தம்பையாஆவார் இவரது சமய, சமூக வாழ்வு புனிதமானவையாகும். தொண்டனாகவும், தூயவனாகவும் வாழ்ந்து வந்த இவரது மறைவு எமக்குப் பெருநஷ்டமாகும்

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் சமாதான நீதவான் மூளாய் இ. தம்பையாவின் மறைவையொட்டி நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மற்றும்பலரும் இரங்கல் உரை நிகழ்த்தினர் [அ]

......

## வாலிபருடன் மாணவி கைது

(வண்ணார்பண்ணை)

சுன்னாகப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விளையாட்டுப்போட்டி ஒன்றைப் பார்க்கச் சென்ற யாழ். மகளிர் கல்லூரி ஒன்றில் பயிலும் மாணவி ஒருவர் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்

இந்த மாணவி சந்தேகத்திடமான முறையில் வாலிபர் ஒருவருடன் சுன்னாகத்தில் நடமாடியதாக அவரையும் வாலிபனையும் சுன்னாகம் பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தினர். மாணவியை பெற்றோரின் பொறுப்பில் கொடுப்பதற்கு சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு சுகுனேந்திரன் நடவடிக்கை மேற்கொண்டார்.

குறித்த மாணவியினதும், முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன

விளையாட்டுப் போட்டிக்கு வந்த மாணவிகளுடன் மோசமாக நடக்க முயன்ற சில வாலிபர்களும் சுன்னாகம் பொலிசாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

# பரந்த ரீதியில் நாவலர் விழா!

## யாழ். மாவட்டக் கலாச்சாரக் குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய வீரராக மதிக்கப்படுகின்ற நாவலர் பெருமானை இலங்கை மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளத்தக்க விதத்தில் அவர் பற்றிய புனையா மெய்விளக்கத் திரைப்படம் டாக்குமெண்டரி படம் ஒன்றினை அரசாங்கத்திரைப்படப் பிரிவினரைக்கொண்டு உடனடியாகத் தயாரித்து நாவலர் நூற்றாண்டின்போது திரையிட ஏற்பாடுகள் செய்வதென்று யாழ் அரசாங்க செயலகத்தில்கூடிய நாவலர் பெருமானின் நூற்றாண்டுவிழா ஏற்பாடுகளுக்கான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மாவட்டச் செயலாளரும், யாழ் மாவட்டக் கலாச்சாரக்குழுத் தலைவருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது; அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

"ஆறுமுகநாவலர் விழாவினை தேசிய மட்டத்திலே நடத்துவதற்கு அமைவாக தேசிய கருத்தரங்கினை நடத்துவது நாவலரின் பன்முகத்தைக் காண்பிக்கின்ற இந்தக் கருத்தரங்கிலே பல்துறைகளையும் சார்ந்த அறிஞர்கள் நாவலரை ஆய்வுசெய்வார்கள்.

"நாவலரினுடைய எழுத்துக்கள், கைப்பிரதிகள் ஆகிய பெறுமதி வாய்ந்த ஆவணங்களையெல்லாம் ஒன்று சேர்த்தல், நாவலர் பெருமான் பணியாற்றிய சிதம்பரம் போன்ற இடங்களிலும், இலங்கையிலுள்ள இந்த ஆவணங்களைச் சேகரித்தல்.

"நாவலர் வாழ்ந்த இடத்திலே, அவர் நினைவாக ஆராய்ச்சி மண்டபம் ஒன்றினை நிறுவுவதற்கான பணியினை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுத்தல். இம்மண்டபம் நினைவுச்சின்னமாக மாத்திரம் அமையாது நாவலர் அரும்பொருள் சாலையாகவும், ஆவணச் சேகரிப்புள்ள ஆராய்ச்சி நிலையமாகவும், திராவிட இந்து கலாச்சாரப்பாணியிலே அமைந்ததாயும் விளங்குதல் வேண்டும்.

"நாவலர் பெருமானின் நூற்றாண்டுவிழா மலரினை, அறிஞர் பெருமக்களின் துணையோடு காத்திரம் வாய்ந்த ஆராய்ச்சி நூலாக வெளியிடுதல் அதோடு கல்வித்திணைக்களம், சமயநிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு இளைஞர்கள், மாணவர்களிடையே கட்டுரை பேச்சுப் போட்டிகளை நடத்துதல்.

"வசன நடைக்கும், சமயத்துறைக்கும் பெரும் பங்களிப்புச் செய்து நாவலர் பெருமானின் பல நூல்களையும் சிறந்த முறையில் மலிவுப் பதிப்பு நூல்களாக வெளியிட ஏற்பாடு செய்தல்

"தேசிய உணர்வினதும், விழிப்பினதும் அடையாளமாக விளங்கிய நாவலர் பெருமானின் நூற்றாண்டு விழாவினை தேசியமட்டத்திலே சிறப்புறக் கொண்டாட யாழ்ப்பாண மாவட்டக் கலாச்சார மன்றம் தீர்மானித்துள்ளது நாவலர் பெயரால் இயங்குகின்ற பல்வேறு நிறுவனங்களையும் ஒன்றிணைத்து நடத்தும் இம்முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்வி அதிபதி, நாவலர் சபைத் தலைவர்கள் இந்துசமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமிழறிஞர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சீரிய யோசனைகளைத் தெரிவித்தனர். பிரதேச அபிவிருத்தி தமிழ்ப்பிரயோக இந்துசமய விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரான திரு. கணேசராஜாவும் இக்கூட்டத்திலே கலந்து கொள்வதற்கென அமைச்சில் இருந்துவந்திருந்தார். [சொ]

### சென்.பற்றிக்ஸ் கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிறட் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். திருமதி யூலியட் அல்பிறட் பரிசில்களை வழங்குவார்

### நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் மலர்மகள் நாடக மன்றத்தின் நிர்வாக சபைக் கூட்டம் திரு ஆர் ஸ்ரீராம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவாகினர்

தலைவர்: திரு ஆர் ஸ்ரீராம் உபதலைவர்: எஸ் சிவகுமாரன் கௌரவசெயலாளர் எஸ் தங்கராஜா, பொருளாளர்: எஸ் தர்மபாலன், கணக்காளர் வி பாலச்சந்திரன்.

பதினொருபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. (கா)

### ரிக்ஷா ஓட்டிக்கு அடித்தயோகம்

புதுடில்லி, ஜூலை.6

இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவந்த மேற்குஜெர்மன் பெண்மணி ஒருவர் ரிக்ஷாவண்டி யொன்றை வாடகைக்கு அமர்த்தி முக்கிய இடங்களைப் பார்வையிட்டு வந்தார்.

ஒரு கிழமைக்கு ரிக்ஷாவை வாடகைக்கு அமர்த்தியிருந்த அந்த ஜெர்மன் அழகி ரிக்ஷா வாலிபனின் அன்புஉபசரிப்பில் மகிழ்ந்து அவர்மீது காதல் கொண்டுவிட்டார் இப்போது அந்த இந்தியரைத் திருமணம் செய்து கொண்டுவிட்ட அப்பெண் தமது கணவரை ஜெர்மனிக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்!

### வலதுகுறைந்தோர் புனர்வாழ்வு வாரம் இன்று

[யாழ்ப்பாணம்]

வலதுகுறைந்தோரின் புனர்வாழ்வு வாரம் இன்று ஆரம்பமாகி இம்மாதம் 15ம் தேதி வரை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

யாழ் லயன்ஸ் கழகத்தினர் சமூகத்தின் முக்கிய பிரமுகர்களின் ஆதரவுடன் இவ்வாரத்தை அனுஷ்டிக்கின்றனர். [சி]

## செங்கலடி கொள்ளை வழக்கு:

# ஜூரிகள் இல்லாமல் விசாரிக்கப்படும்!

(கொழும்பு)

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கு ஜூரர்கள் இல்லாது விசாரிக்கப்படவிருக்கிறது மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது

ஜூலை 2-ம் திகதி முதல் அமுலுக்கு வந்த குற்றவியல் நடைமுறை ஒழுங்கு திருத்தச் சட்டத்தின் கீழ் இவ்வழக்கு ஜூரர்கள் இல்லாமல் விசாரிக்கப்படுவது சாத்தியமாகின்றது.

இவ்வழக்கில் சந்தேக நபர்களான ராமலிங்கம் பரமதேவன், வேலும் மயில் விஜயசுந்தரன், ஈஸ்சன் கனகரத்தினம், நன்னித்தம்பி வாமதேவன் ஆகியோர்மீது செங்கலடி கிராமிய வங்கியிலிருந்து 1,77 400 ரூபாவை கொள்ளையடித்ததாகவும் ரூ. 25000 பெறுமதியான காரினை கடத்தியதாகவும் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கை தமிழ் பேசும் ஜூரர்கள் முன்னிலையில் முன்பு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எல் எச் அல்விஸ் விசாரித்து வந்தார். வழக்கு முடியும் தறுவாயிலிருக்கும் சமயம் ஜூரர்கள் இலங்கை விடுகள் கல்விச்சுக்குள்ளானதைத் தொடர்ந்து நீதிபதி ஜூரர்களை இடைநிறுத்தி வழக்கு மீண்டும் புதிதாக விசாரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்,

இவ்வழக்கு இப்போது ஜூரிகள் இல்லாமல் விசாரணைக்கு எடுக்கப்படவிருப்பதாக அதிகார வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

நாகம்மா (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, சாவித்திரி
காத்தவராயன்

ஜனத்திரள் நிறைந்த 3வது வாரம்
Rio (Jaffna) Phone: 7607 Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

கொட்டகை நிறைந்த 4-வது வாரம்
REGAL (Jaffna) Daily at 2-00 4-30, 7-00 & 9-30 p.m. only
Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

3-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

[குறிப்பிடப்பட்ட சில தினங்கள் மட்டும்]
மனோகரா (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-பத்மினி கருணாநிதியின்
பணம்
[புதிய பிரதி]
[இதுவே யாழ்நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப் படுவதால் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்]

சில தினங்கள் மட்டும்
வின்சர் [யாழ்ப்பாணம்] போன்: 400 தினசரி 4 காட்சிகள்
10-30 2-00, 6-00, 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன [யாழ்ப்பாணம்] தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

லிடோ (யாழ். நகர்) போன் 7693 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா
செல்வம்

84வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
ராஜா யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்-கல்பனா நடித்த
சாது மிரண்டால்
[புத்தம் புதிய பிரதி]

வெஸ்லி
காவிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீவித்யா
ஆசை அறுபது நாள்

இப்பொழுது ஜனத்திரள் நிறைந்த காட்சிகளாகக் காண்பிக்கப்படுகிறது!
சாந்தி யாழ். நகர் - போன் 7642
10-30, 2-30, 6-30, 9-45.
திலிப் குமார்... சர்மிலா தாகூர்...
காதுக்கினிய பாடல்கள்! கண்கவர் நடனங்கள்!
திகிலூட்டும் மர்மங்கள்!
டாஸ்தான்
— இந்தி — ஈஸ்ட்மன் கலர் —
13-7-79 "MR. MAJESTYK" Adults only—Color
Dont miss this Action Packed Movie

# தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசாங்கம் தடைசெய்தால்...

## 'அமிர்' யாழ். மாநகரசபை உறுப்பினர்களுக்கு விளக்கம்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசு தடைசெய்யும் நிலைவந்தால் தமிழ்மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை உரிய நேரத்தில் நாம் அறிவிப்போம் அவ்வேளையில் எமது அறிவித்தலுக்கு ஏற்ற முறையில் இயங்க அவர்கள் தயாராக இருக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் யாழ் மாநகரசபை கூட்டணி உறுப்பினர்களுக்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் பேசுகையிலேயே திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்:

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

தமிழர் இன்று கத்திமுனையில் நடப்பதுபோன்ற நிலையில் இருக்கின்றனர். தமிழ்மக்கள் தம்முள் இருக்கும் சிறு பூசல்களை மறந்து ஒற்றுமையாக இயங்கவேண்டிய நிலையில் இருக்கின்றனர். நாம் உரியநேரத்தில் அறிவிப்போம் அந்த நேரத்தில் அதற்கு ஏற்றமுறையில் இயங்கத் தயாராக இருக்கவேண்டும்.

அரசு எமக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கையின் விளைவைக் கவனித்து அதற்கு ஏற்ப நடந்து முன்னேறிச் செல்வோம். [கொ-க-இ]

# மண்டைதீவில் துப்பாக்கிச்சூடு

## மூவரைப் பொலிஸ் தேடுகிறது

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு 2ம் வட்டாரத்தில் ராசரத்தினம் புவிபாலன் என்ற விவசாயி, துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களான பரமராஜலிங்கம் பழநி, சுப்பிரமணியம் ராஜலிங்கம், க. வரதராசா ஆகியோர் வீட்டுப்படலையில் வந்து நின்றதாகவும், சந்தேக நபரான பாலன் சுட்டதாகவும், பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்களை பொலிஸார் தேடிவருகின்றனர். பழைய பகையே இச்சம்பவத்திற்கு காரணம் எனக் கூறப்படுகிறது [கொ]

# யாருடைய சடலம்?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸார் வீதியில் கிடந்த அடையாளம் காணப்படாத வயோதிபர் ஒருவரின் சடலம் ஒன்று யாழ். பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க இந்த வயோதிபர். 5 அடி உயரமும், பொது நிறமும் உடையவர். இறந்து கிடந்தபோது சாரம்மட்டும் அணிந்திருந்தார். [கெ-இ]

# நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சப்-இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிளுக்கு நீதிமன்றக் கட்டளை

[புலோலி]

முன்னாள்வல்வெட்டித்துறை பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் மீதும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள்மீதும் பருத்தித்துறை நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

வல்வெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை தியாகலிங்கம் என்பவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கைத்தொடர்ந்தே மாஜிஸ்திரேட் திரு. கே. ஞானச்சந்திரன் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த சப்-இன்ஸ்பெக்டரையும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் எதிர்வரும் 27ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சப்-இன்ஸ்பெக்டர் சேனாதர்ம தம்மைத் துப்பாக்கியால் சுட்டுக் காயம் விளைவித்ததாகவும், பொலிஸ்கான்ஸ்டபிள்கள் பண்டார, பேரிட்டி ஆகியோர் தம்மைத் தாக்கியதாகவும், சட்டவிரோதமாகத் தன்னைத் தடுத்து வைத்திருந்ததாகவும் தியாகலிங்கம் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

## மஞ்சுசிறி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர் சிங்களவரா, தமிழரா என்று எவரும் கேள்வி எழுப்பவில்லை என்றும் விபத்தைக் கண்டதும் மக்கள் உடனடியாக உதவ முன்வந்தார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரு ஹமில்டன் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் திரு எச் ரெஹினுக்கு எழுதியுள்ள கடிதத்தின் முழுவிபரம் நாளை வெளிவரும்.] [ம-கு]

## தற்காலிக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திகதிகளில் காலை ஆறு மணியிலிருந்து பிற்பகல் ஐந்து மணி வரை மின்சார விநியோகம் தற்காலிகமாகத் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## நயினை உற்சவம்!

# தாகசாந்தி நிலைய ஆரம்ப விழா

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு அபிவிருத்திச் சபையின் 7-வது ஆண்டு தாகசாந்தி நிலைய ஆரம்பவிழா இன்றிரவு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான முன்றலில் நடைபெறவுள்ளது.

மங்கள விளக்கை, இணைப் பாரிய சாணி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் திரு. எம். ஸ்ரீகாந்தா ஏற்றிவைப்பார். பிரதிஷ்டா பூஷணம் நயினை சிவஸ்ரீ சாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், முன்னாள் வவுனியா அரச அதிபர் திரு. செ. சிவஞானம், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து, வடபிரதேச சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

இச்சபை இன்றிலிருந்து உற்சவகாலமான 10 ந் திகதிவரை அடியார்களுக்கு இலவசமாக கோப்பி, தேநீர், குளிர்பானங்கள் வழங்கும். [கெ]

## தம்பதிகள் கொலை: மேல்விசாரணை ஒத்திவைப்பு

[புலோலி]

தொண்டமானாறில் மண்டையில் பலத்தகாயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்ட தம்பதிகளின் மரணம் சம்பந்தமான விசாரணைகளுக்காக பருத்தித்துறை நீதவான் திரு கே ஞானச்சந்திரன் முன்னிலையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சாட்சிகள் கூப்பிடப்பட்ட போது இச்சம்பவத்தொடர்பாகச் சாட்சியமளிக்க எவரும்முன் வரவில்லை. இதனையடுத்து பிரேதபரிசோதனை அறிக்கையை இம்மாதம் 13ம் திகதி சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிபதி மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

## யாழ், மாநகரசபை

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

டத்துடன் அனுராதபுர மாவட்டத்தின் 3 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இணைக்கும் முயற்சியை தடுப்பதற்கு தமிழ் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம், பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டும் அதே வேளையில் இது தமிழ் பேசும் மக்களுக்கு குடியேற்றத்திட்டத்தைவிட படுமோசமாக இருக்கின்ற காரணத்தினால் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உடன் நிறுத்துமாறு அரசைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என சபை தீர்மானிக்கிறது. [க-இ]

# சிறிமாவின் சமையலறை குறித்து அமைச்சர் விமலா

[கொழும்பு]

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் துறைமுகங்களில் உள்ள சமையல் கூடங்கள் மிகமோசமாகத் துப்புரவின்றி காட்சி தந்தன. நான் முன்னர் கப்பல் போக்குவரத்து அமைச்சராகப் பதவி ஏற்றபோது இதனை அவதானிக்க முடிந்தது.

"அக்காலத்தில் துறைமுக சமையல் கூடத்தில் ஆண்கள் கௌபீனத்துடன் கூடநிற்றதைக்கூட காணலாம்.

'ஆனால் திருமதி சிறிமாவின் சமையல்காரர்கள் அப்படி இருந்திருக்கமாட்டார்கள். சமையல் அறைகள் மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்தது,

முன்னாள் கப்பல் போக்குவரத்து அமைச்சரும் தற்போதைய கிராம அபிவிருத்தி அமைச்சருமான திருமதி விமலா கன்னங்கரா நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அப்போது திருமதி பண்டாரநாயக்கா சபையில் இதைக்கேட்டுக் கொண்டிருந்தார்' [ம-இ]

# 'அமிர்', தர்மருக்கு ரயில்நிலையத்தில் வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவிட்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திரும்பிய எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்திற்கும், மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கத்திற்கும் யாழ் ரயில் நிலையத்தில் வரவேற்பளிக்கப் பட்டது.

தலைவர்களுக்கு யாழ். மாநகரசபை முதல்வர் திரு. விஸ்வநாதன், மாலை சூட்டி வரவேற்றார்.

மாநகரசபை உறுப்பினர்கள், கூட்டணிப் பிரமுகர்கள் இளைஞர்கள் ரயில் நிலையத்தில் திரண்டு நின்று தலைவர்களை வரவேற்றனர். [கொ-இ]

## மசோதா நிறைவேறியது

[கொழும்பு]

துறைமுக அதிகாரசபை மசோதா நேற்று பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இச்சட்டமூலம்மீது பேசிய வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு அத்துலத்முதலி, "சபையில் தற்போது இருக்கும் உறுப்பினர்களும் இங்கு இல்லாத உறுப்பினர்களும் இந்த சட்டமூலத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்

பாராளுமன்றம் மீண்டும் இம்மாதம் 19ம் திகதி கூடும். [ம-இ]

## மெயில் ரயிலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் செய்யவில்லை என்றும் ரயில் சுமார் 8-10 மணிக்குப் புறப்பட்டது என்றும் தெரிய வருகிறது. [தி-இ]

## காசி தம்பதிக்கு வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

கவிஞர் காசி ஆனந்தன் தம்பதிகளுக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றிரவு பொதுமக்கள் வரவேற்பளித்தனர்.

அவ்வரவேற்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம் பி திரு. கதிரவேலுப்பிள்ளை, ஊர்காவற்றுறை எம் பி திரு. கா. பொ. இரத்தினம், பருத்தித்துறை எம் பி திரு. துரைரத்தினம், யாழ் மேயர் திரு. ஆர். விசுவநாதன், யாழ்மாநகரசபை உறுப்பினர்கள், தமிழ் இளைஞர் பேரவையினர் மகளிர் பேரவையினர், கூட்டணி ஆதரவாளர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

காசி ஆனந்தன் தம்பதிகள் முனீஸ்வரன் ஆலயத்திலிருந்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். மண்டபவாசலில் பூரண கும்பம் வைக்கப்பட்டு ஆராத்தி எடுக்கப்பட்டது.

கண்பார்வையற்ற ஒருவர் நேரில் வந்து கவிஞரைக் கட்டித்தழுவி ஆசிகூறினார். [செ-ர]

# அறிவித்தல்

## மின்சாரத் தடை

இலங்கை மின்சாரசபையினரால் சில அத்தியாவசிய திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படஇருப்பதால், 08-07-1979. 09-07-1979ம் திகதிகளில்காலை 6-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகரசபைப் பிரதேசத்துக்குள் மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே பாவனையாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

க. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்
மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
6-7-1979. 2991

# போலி நகை கொடுத்து ஏமாற்றினராம்

## தண்டனை ஒத்திவைப்பு

[புலோலி]

பவுன் அல்லாத நகைகளைப் பவுண் நகை என்று ஏமாற்றிப் பணம்பெற்றுக்கொண்ட இருநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொன்னையா இராசலிங்கம், நாகலிங்கம் சிங்காரம் ஆகிய இருவரும் மூத்ததம்பி சுப்பிரமணியம் என்பவருக்கு பவுண் அல்லாத போலி நகைகளைக் கொடுத்து பவுண்நகை என ஏமாற்றி 4,000 ரூபா பெற்றுக்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டபோது இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டதை படுத்து இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி தண்டனைவழங்குவதை ஒத்திவைத்தார்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட இராஜலிங்கம், வேலுப்பிள்ளை கதிரிப்பிள்ளை என்பவருக்கும் இதேபோன்று மோசடி செய்து 2500 ரூபா பெற்றுக்கொண்டதாகத் தொடரப்பட்ட மற்றொரு வழக்கிலும் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் பவுண்நகைகள் என முலாம் பூசப்பட்ட நகைகளைக் கொடுத்து பணம்பெற்று நம்பிக்கை மோசடி செய்யப்பட்டு வரும் வழக்குகள் நாளுக்குநாள் அதிகரித்துவருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி. டி. சி. இராஜசுந்தரம்

சாவகச்சேரி, தேவாலய வீதியைச் சேர்ந்த திருமதி டி. சி. இராஜசுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. டி. சி. இராஜசுந்தரத்தின் அன்பு மனைவியும் திருமதி எஸ். சி. இராஜரட்ணம், ஆர். அற்புதராஜா ஆகியோரது அன்புத் தாயாரும், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ஏ. சுப்பிரமணியத்தின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 16, தேவாலய வீதி, சாவகச்சேரி இல்லத்திலிருந்து இன்று 7-7-79 மாலை 4-30 க்கு சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 2977

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegrams: Eelanaadu [illegible]